FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313272

1. District : மாவட்டம் Ranipet PS: Vigilance & Anti Corruption காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No. 07/2026 முத.அ. எண் Date: 28.8.2026 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: U/s 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.8.2026 Date to : நாள் வரை Prior to 15.00 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.8.2026 Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III Time : நேரம் 28.8.2026 @ 15.00 hrs 16.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் - Taluk office, Arcot, Ranipet District about 7 Kms Southwest
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : D.Jegadeeswaran குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Duraisamy தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் Deputy Tco (g) Address : முகவரி Inspection Cell office, Vellore Ranipet Tirupathur and Tiv.Malai Districts Collectorate Campus, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. A.V. Shanmuga Sundaram, Age 47/2026, S/o Varadappan, Tahsildar, Arcot Taluk, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

28/8/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28/8/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.2026 @ 17.00 hrs

Name: பெயர் V. Ganesan,
Rank: நிலை ..... No. எண் .....
Deputy Superintendent of police,
Vigilance & Anti-corruption,
Ranipet.

Attachment in Column No. 12 of FIR in Ranipet V&AC Cr.No.07/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 28.08.2026-ஆம் தேதி சுமார் 15.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- நாள்: 28.08.2026 அனுப்புநர் D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9.பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அய்யா, பொருள்: இராணிப்பேட்டை மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 27.08.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான புகார் சமர்ப்பித்தல் - தொடர்பாக. கடந்த 27.08.2026 ஆம் தேதி பகல் சுமார் 13.30 மணிக்கு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழுவின் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய எனக்கு இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுக்கா, கஸ்பா, ஆற்காடு- செய்யாறு சாலையில் உள்ள ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா, சிட்டா, பட்டா பெயர் மாற்றம் மற்றும் திருத்தம், நிலஅளவை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் உதவித்தொகைகள் வேண்டி வரும் பொதுமக்களிடம் இருந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் தனித்தனியாக பொது மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக நேரடியாகவும், இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மற்றும் தனி நபர்கள் மூலமாக கையூட்டு பெறுவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கணேசன் அவர்களுக்கு சுமார் 14.30 மணிக்கு தகவல் தெரிவித்து, சுமார் 14.45 மணிக்கு இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து குழுவினருடன் புறப்பட்டு, ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள சுமார் 15.00 மணிக்கு வந்து சேரப்பட்டது. இருதுறை திடீர் சோதனைக்குழுவினராகிய நாங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தின் உள்ளே சென்று, அலுவலகத்தின் தரைத்தளத்தில் இடதுபுறம் உள்ள வாயிலின் வழியாக உள்ளே சென்று பார்க்க, அது பெரிய ஹாலாக இருந்தது. அந்த ஹாலில் வலது பக்கத்தில் அலுவலக

பணியாளர்கள் அலுவலகப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இடது பக்கத்தில் உள்ள முதல் அறையை பார்க்க, அந்த அறையானது தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) அவர்களின் அறையும், அதனை அடுத்துள்ள அறை வட்டாட்சியர் அறையாகவும் காணப்பட்டது. வட்டாட்சியர் அறையின் இருக்கை காலியாக இருந்தது. அந்த ஹாலின் பணியில் இருந்த நபரிடம் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை குழுவினராகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, வந்திருக்கும் நோக்கத்தை தெரிவித்து, வட்டாட்சியர் குறித்து விசாரிக்க, வட்டாட்சியர் திரு.A.V.சண்முகசுந்தரம் அவர்கள் மதிய உணவிற்காக தனது அரசு குடியிருப்பிற்கு சென்றிருப்பதாக சொன்னார். பின்னர், அவரை விசாரிக்க, தன்னுடைய பெயர் பாரதி என்றும், தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக சொன்னவரிடம் வட்டாட்சியரை உடனே வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும்படி தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்த அவரும் தகவல் தெரிவித்தார். பின்னர், தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அவர்கள் அறைக்கு சென்று பார்க்க, அங்கு தனி வட்டாட்சியர் (ச.பா.தி) என்ற போர்டிற்கு கீழே உட்கார்ந்து அலுவலை பார்த்துக்கொண்டிருந்த பெண்மணியிடம் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை குழுவினராகிய நாங்கள் அவரிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, வந்திருக்கும் நோக்கத்தை தெரிவித்து, அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் M.ரேணுகா என்றும், தான் தனி வட்டாட்சியர் (சமூகப்பாதுகாப்புத்திட்டம்) ஆக கடந்த 16.12.2025 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக சொன்னார். அவரை சோதனை செய்ய Hand Bag-ல் Money Purse-ல் பணம் ரூ.3,300/- இருந்தது, அதுகுறித்து அவரிடம் விசாரிக்க, அது தன்னுடைய சம்பள பணம் என்றும், இன்று தனது வீட்டருகில் உள்ள தெரிந்த நபரின் குடும்ப விழாவிற்கு பரிசுப்பொருட்கள் வாங்க எடுத்து வந்ததாக சொன்னார்.மேற்படி பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. சோதனையின் போது மதியம் 15.15 மணியளவில், மதிய உணவிற்காக சென்றிருந்த வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம் அவர்கள் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரிடம் நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு வந்திருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரிடம் அவரது அறையில் இருக்கும்படி தெரிவிக்கப்பட்டது. பின்னர், தனி வட்டாட்சியர் (ச.பா.தி.) அவர்களின் அறையில் இருந்த நபர்களை சோதனை செய்ததில், (1) திருமதி.காயத்ரி, இளநிலை வருவாய் ஆய்வாளர் (2) திருமதி.அபிராமி, தட்டச்சர் (3) திரு.சூர்யகுமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என விவரம் தெரிவித்தனர். அவரவர் வைத்திருந்து பணத்திற்கு தக்க முகாந்திரம் தெரிவித்ததால், அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அந்த அறையில் தனியாக நின்று கொண்டிருந்த ஒரு

நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் மோகன் த/பெ கன்னியப்பன், எண்.A1, கண்ணபிரான் தெரு, கிளைவு பஜார், ஆற்காடு என்றும், தான் அடிக்கடி ஆற்காடு தாலுக்கா ஆபீஸிற்கு வேலையாக வந்து போவேன் என்று சொன்னார். பின்னர், திருமதி.ரேணுகா, தனி வட்டாட்சியர் அவர்களிடம் மேற்படி திரு.மோகன் அவர்களை குறித்து விசாரிக்க, மேற்படி நபர் அடிக்கடி தாலுக்கா ஆபீஸிற்கு வந்து போவார் என்று சொன்னார். திரு.மோகன் அவர்களிடம் அவருடைய மனு ஏதாவது தாலுக்கா அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதா என விசாரிக்க, அவர் அவ்வாறு எதுவும் நிலுவையில் இல்லை என்று சொன்னார். பின்னர், அவரை சோதனை செய்ய, அவரது பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் தனித்தனியாக பணம் வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில், ஒரு கத்தையை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.390/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் அந்த பணத்தை தன்னுடைய செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமிருந்தவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் மொத்தம் ரூ.8,000/- இருந்தது. பணம் ரூ.8,000/- குறித்து விசாரிக்க, அவர் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் ஏதும் கூறாததால் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலர்களின் கைபேசிகளை வாங்கி அவர்களது UPI Transactions ஆராய்ந்து பார்த்ததில், சந்தேகத்திற்கு இடமான Gpay பரிவர்த்தனை ஏதும் இல்லை. மேற்படி தனி வட்டாட்சியர் அறையினை முழுமையாக சோதனை செய்ததில் அலுவலக ஆவணங்களை தவிர வேறு ஏதும் இல்லை. மேற்படி தனி வட்டாட்சியர் அறையை அடுத்துள்ள வட்டாட்சியர் அறைக்கு சென்று ஆஜரில் இருந்த வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம் அவர்களை விசாரிக்க, அவர் தான் கடந்த 01.03.2026 ஆம் தேதி முதல் ஆற்காடு வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், வட்டாட்சியர் அலுவலக அறையினை முழுமையாக சோதனை செய்ய அலுவலக ஆவணங்களைத்தவிர வேறேதும் இல்லை. வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம் அவர்களின் கைபேசியை வாங்கி இணைய வழி பரிவர்த்தனைகளை பார்க்க, அவருடைய சோளிங்கர் கிளை SBI A/c No.32331416450-ன் Yono App மற்றும் Gpay App ஆனது 8608446269 என்ற கைபேசி எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். அதில் கடந்த 04.04.2026 அன்று Anbu S என்ற பெயரில் இருந்து பணம் Rs.50,000/- பெறப்பட்டது குறித்து கேட்க, மேற்படி அன்பு என்பவர் தன்னுடைய நண்பரின் மாமனார் என்றும், அவரிடம் தேர்தல் செலவிற்காக பெற்றதாக சொன்னார். அதேபோல 24.06.2026 அன்று Anandaraj P Rs.15,000/-, 01.07.2026 அன்று Anandaraj P Rs.10,000/-, 30.07.2026 அன்று Anandaraj P

Rs.50,000/- ஆக மொத்தம் ரூ.75,000/- பெறப்பட்டுள்ளது, அது குறித்து திரு.சண்முகசுந்தரம் அவர்களை விசாரிக்க, திரு.ஆனந்தராஜ் என்பவர் வருவாய் ஆய்வாளர் என்றும், அவர் தற்போது மாம்பாக்கம் உள்வட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி பணம் அனுப்பிய சமயத்தில் திமிரி உள்வட்டத்தில் பணிபுரிந்து வந்ததாகவும், இதற்கு முன்பு தானும், மேற்படி ஆனந்தராஜ் அவர்களும் சேர்ந்து பணிபுரிந்தபோது தங்களுக்குள் நல்ல பழக்கம் என்றும், அதனால் தான் கடந்த 2020-ல் திரு.ஆனந்தராஜிக்கு ரூ.50,000/- ரொக்கமாக கடன் கொடுத்ததாகவும், அதை அவர் தற்போது தனக்கு திருப்பி தந்தார் என்றும், மீதமுள்ள தொகைகள் அவருடைய ATM Card வேலை செய்யாதபோது அவர் தன்னிடம் பணத்தை கொடுத்து வைத்து அந்த தொகையை Gpay மூலமாக திருப்பி கொடுத்ததாக சொன்னார். ஆனால், அவரது பதில் திருப்திகரமாக இல்லை. மேற்படி வட்டாட்சியர் அலுவலக பொது பிரிவில் ஆஜரில் இருந்த அலுவலர்களான (1) திரு.K.பாரதி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், (2) செல்வி.C.சுகாசினி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், (3) திரு.R.தமிழழகன், இளநிலை உதவியாளர், (4) திரு.A.பிரதாப் தட்டச்சர், (5) திருமதி.K.ஷோபனா பிரியா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், (6) திருமதி.குணா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், (7) திரு.B.விக்னேஷ்வரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், (8) திரு.S.வடிவேல், அலுவலக உதவியாளர், ஆகியோரை சோதனை செய்து அவரவர் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் தெரிவித்ததால் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்படி வட்டாட்சியர் அலுவலக ஹாலை அடுத்து பொதுமக்கள் காத்திருக்கும் பகுதியில்திரு.வெங்கடேசன், திரு.திவாகர், திரு.விக்னேஷ்வரன் ஆகியோர் இருந்தனர். பின்னர், பொது மக்கள் காத்திருக்கும் பகுதியில் வடமேற்கு திசையில் உள்ள கண்ணாடியால் ஆன மக்கள் தொகை கணக்கெடுக்கும் பிரிவில் இருந்த V.மோனிகா என்றும், கீராம்பாடி மற்றும் கடப்பந்தாங்கல் கிராம நிர்வாக அலுவலர் என்று சொன்னார். மற்றவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் தர்ஷினி என்றும், தான் ஒப்பந்த அடிப்படையில் Technical Assistant ஆக பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், அந்த அறையை சோதனை செய்ய, அங்கு பதிவேடுகளையும், ஆவணங்களையும் தவிர வேறேதும் இல்லை. பின்னர், அந்த அலுவலகத்தின் தரைத்தளத்தின் மேற்கு பகுதியில் இருந்த பதிவறையை பார்க்க, அந்த அறையில் ஒரு பெண் அலுவலர் பணியில் இருந்தார். அவரை விசாரிக்க, தன்னுடைய பெயர் S.புவனேஸ்வரி என்றும், தான் இந்த பதிவறையின் ரெக்கார்டு கிளர்க் என்று சொன்னார். பின்னர், பதிவறையை சோதனை செய்ய, அந்த அறையில் இருந்த ரேக்குகளில் பதிவேடுகளையும், ஆவணங்களையும் தவிர வேறேதும் இல்லை. பின்னர், வட்டாட்சியர்

அலுவலகத்தின் முதல் தளத்தில் சோதனை செய்ய, மாடிப்படிக்கட்டுகள் வழியாக முதல் தளத்திற்கு சென்று, அதன் மேற்கு பக்கம் நில அளவை பிரிவிற்கு சென்று சேரப்பட்டது. அங்கு வட்ட துணை ஆய்வாளர் (நிலஅளவை) அலுவலகத்தில் அவர் இல்லை என்பதால், அங்கு இருந்தவர்களிடம், இருதுறை திடீர் சோதனைக்கு வந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. அங்கு ஆஜரில் இருந்த ஒரு பெண் அலுவலரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் திருமதி.விஜயசாந்தி, முதுநிலை வரைவாளர், நிலஅளவை பிரிவு, ஆற்காடு வட்டம் என தெரிவித்தார். அவரிடம் வட்ட துணை ஆய்வாளர்(நிலஅளவை) குறித்து விசாரிக்க அவர் மதிய உணவிற்கு சென்றுவிட்டு, உதவி இயக்குநர்(நிலஅளவை) அவர்களின் கூட்டத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். ஆஜரில் இருந்த பெண் அலுவலர்களை பெண் உதவி ஆய்வாளர் திருமதி.சௌபர்னிகா அவர்கள் மூலம் மறைவிடத்தில் மாண்பு குறையாமல் சோதனை செய்தும், ஆண் அலுவலர்களை ஆண் காவலர்கள் மூலம் சோதனை செய்யப்பட்டது. ஆஜரில் இருந்த அலுவலர்கள் (1) திருமதி.விஜயசாந்தி, முதுநிலை வரைவாளர், நிலஅளவை பிரிவு (2) திருமதி.S.அகிலர், புல உதவியாளர், நிலஅளவை பிரிவு (3) திரு.M.விஜயரங்கன், நில அளவையர்(நீர் நிலை அளவீடு செய்பவர்), நிலஅளவை பிரிவு (4) திரு.J.முத்துராஜ், உரிமம் பெற்ற நில அளவையர், நிலஅளவை பிரிவு (5) திரு.C.மோகன்பாபு, உரிமம் பெற்ற நில அளவையர், நிலஅளவை பிரிவு என இருந்தனர். மேற்படி நில அளவை பிரிவு அலுவலகத்தை முழுமையாக சோதனை செய்ததில் அலுவலக ஆவணங்களை தவிர வேறு ஏதும் இல்லை. நில அளவை பிரிவிற்கு பக்கத்தில் கிழக்கு பக்கம் உள்ள அறையை பார்க்க தேர்தல் பிரிவு என இருந்தது. அந்த அறையில் ஒரு ஆண் அலுவலரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் திரு.மணிகண்டன், தேர்தல் தரவு உள்ளீட்டார் (ஒப்பந்த பணியாளர்), தேர்தல்பிரிவு, ஆற்காடு வட்டம் என தெரிவித்தார். அவரிடம் துணை வட்டாட்சியர் (தேர்தல்) குறித்து விசாரிக்க அவர் சென்னையில் தலைமை தேர்தல் அதிகாரி அவர்களின் கலந்தாய்வு கூட்டத்திற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். பின்னர் அந்த ஹாலின் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையில் இருந்த ஒரு பெண் அலுவலரை விசாரிக்க, அவர் தன் பெயர் செல்வி.S.அமுதவள்ளி, மண்டல துணை வட்டாட்சியர், ஆற்காடு வட்டம் என தெரிவித்தார் அந்த அறையில் ஒரு மேஜை நாற்காலியும், அந்த அறையின் தென்மேற்கு மூலையில் இருந்த அலமாரி ஆகியவற்றை சோதனை செய்ய ஆவணங்கள் தவிர வேறு ஏதும் இல்லை. பின்னர் இரண்டாவது அறையான தேர்தல் பிரிவின் கிடங்கு அறை, மூன்றாவது அறையான வட்ட வழங்கல் பிரிவு அலுவலர்கள் அறை களை சோதனை செய்ய ஆவணங்கள் தவிர வேறு ஏதும் இல்லை. பின்னர் நான்காவது அறையில் இருந்த ஒரு பெண் அலுவலரை விசாரிக்க,

அவர் தன் பெயர் திருமதி.குழந்தை திரேசா, துணை வட்டாட்சியர் / வட்ட வழங்கல் அலுவலர் என தெரிவித்தார், அந்த அறையை சோதனை செய்ய ஆவணங்கள் தவிர வேறு ஏதும் இல்லை. பின்னர், மேற்படி தனி வட்டாட்சியர் (ச.பா.தி) அலுவலகத்திற்கான அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு மற்றும் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கான அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது, தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் மொத்தம் ரூ.8,000/- மற்றும் இரண்டு வருகைப்பதிவேடுகள் கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 27.08.2026 ஆம் தேதி இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் நானும், காவல் துணை கண்காணிப்பாளர், வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம், தனி வட்டாட்சியர் திருமதி. ரேணுகா ஆகியோர் கையொப்பம் செய்தோம் அதன் நகல் ஒன்றினை வட்டாட்சியர் திரு.சண்முகசுந்தரம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. திரு.சண்முகசுந்தரம், வட்டாட்சியர், ஆற்காடு வட்டம் என்பவரின் கைபேசி மின்னணு பணப்பரிவர்த்தனை பதிவுகள் மற்றும் பிற சூழ்நிலை ஆதாரங்கள் ஆகியவற்றை பார்க்கும் போது திரு.சண்முகசுந்தரம் வட்டாட்சியர் அவர்கள் தன்கீழ் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்தும், இடைதரகர்கள் மூலமாகவும் லஞ்சமாக பணம் பெற்றிருக்கக்கூடும் என தெரிய வருகிறது. எனவே ஆற்காடு வட்டாட்சியர் திரு.சண்முக சுந்தரம் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 27.08.2026 ஆம் தேதி நடத்திய இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.8,000/-ம், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய Sd/-xxxxxxx 28/8/26 (து.ஜெகதீஸ்வரன்)

Sir, Received the complaint on 28.08.2026 at 15.00 hrs and a case in Ranipet V&AC Cr.No.07/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act,1988 as amended by tne PC (Amendment) Act 2018 was registered on 28.08.2026 at 16.30 hrs. Sd/-xxxxx 28.8.2026, DSP, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Principal District and Sessions Judge/Special Judge, Ranipet and sent the copies to the officers concerned.

28/8/2026

Dy. Supdt. of Police
V&A.C Ranipet,
Ranipet Dist.,